**TAMIL ARINGARGALAI AAVANAMAKKAL ORU MUYARCHI - ONE DAY NATIONAL LEVEL SEMINAR. DATE : 25.04.2022**

INVITATION



AGENDA



நாடார் மஹாஜன சங்கம்
சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி
(தேசிய தர நிர்ணய மதிப்பீட்டில் "B" தகுதி பெற்றது)

தமிழ்த்துறை – இணையவழி ஒரு நாள்
தேசியக் கருத்தரங்கம்
நிகழ்ச்சி – நிரல்

முற்பகல் : 11 மணி : தமிழ்த்தாய் வாழ்த்து

11.02 மணி : வரவேற்புரை : திருமதி.க.பாண்டிச்செல்வி ,M.A.,M.Phil., DGT., DYMHH.,
துறைத்தலைவர் & பேராசிரியர், தமிழ்த்துறை

11.05 மணி : தலைமையுரை : திரு.G.மாரிக்குமார் M.A.,M.Phil.,M.T.M.,Ph.D.,
கல்லூரித்தலைவர்

11.10 மணி : வாழ்த்துரை : திரு.G.கரிக்கோல்ராஜ்,
கல்லூரிச்செயலாளர்.

திரு.M.ஜெயக்குமார்,B.E.,
கல்லூரித்தாளாளர்

திரு.D.நல்லதம்பி,B.A.,B.L.,
கல்லூரிப்பொருளாளர்

திருமதி.D.கார்த்திகாராணி, M.Sc.,M.Phil.,(Ph.D.),
கல்லூரி முதல்வர்(பொ)

11.15 மணி : சிறப்புரை : திரு.அ.அறிவன் அவர்கள்,
நிறுவனர் - காப்பாளர்,
புதுவை அருங்காட்சியகம்.

தலைப்பு : "தமிழறிஞர்களை ஆவணமாக்கல் ஒரு முயற்சி"

12.15 மணி : மாணவியர் ஆய்வுத்தாள் வாசித்தல்

12.45 மணி : நன்றியுரை : திருமதி.இரா.முத்துக்கனி,M.A.,M.Phil.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

நாட்டுப்பண்

PHOTO


11:32
Zoom
Leave
REC
SELVAM SELVI
PUDHUVAI MUSEUM
GURUDHATSHAN KRS
S.BABY STELLA
Unmute
Stop Video
Share
22
Participants
More

## நா.ம.ச.சேர்மத்தாய்வாசன் மகளிர் கல்லூரி மதுரை-12
## தமிழ்த்துறை 2021 - 2022
## ஒரு நாள் தேசியக் கருத்தரங்கு அறிக்கை

நாடார் மகாஜன சங்கம் சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரியில் தமிழ்த்துறையின் சார்பாக 25.04.2022 அன்று காலை 11.00 மணியளவில் கல்லூரி கருத்தரங்கக் கூடத்தில் இணையவழியில் ஒரு நாள் தேசியக் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்வு தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே துவங்கியது.

தமிழ்த்துறைத்தலைவி திருமதி.க.பாண்டிச்செல்வி.,M.A.,M.Phil.,B.Ed.,DGT., அவர்கள் இனியதொரு வரவேற்புரையை வழங்கினார். கல்லூரித்தலைவர் முனைவர்.திரு.G.மாரிஸ்குமார் ,M.A.,M.Phil.,M.T.M.,Ph.D., அவர்கள்,"தமிழின் தொன்மையையும் தமிழாய்ந்த புலவர்களின் குறிக்கோள்களையும் ஒவ்வொருவரும் தங்களுக்கான லட்சியமாக எடுத்துக்கொண்டு செயலாற்ற வேண்டும்" என்று சிறப்புற எடுத்துக்கூறி தலைமையுரை ஆற்றினார்.இந்நிகழ்விற்கு கல்லூரிச்செயலாளர் திரு.G.கரிக்கோல்ராஜ், தாளாளர் திரு.ஆ.ஜெயக்குமார்,B.E., பொருளாளர் திரு.D.நல்லதம்பி,B.A.,B.L.,அவர்கள் மற்றும் கல்லூரி முதல்வர் திருமதி.D.கார்த்திகா ராணி,M.Sc.,M.Phil.,(Ph.D)., ஆகியோர் தங்களது வாழ்த்துகளை தெரிவித்தனர்.

இக்கருத்தரங்கில் "தமிழ் அறிஞர்களை ஆவணமாக்கல் ஒரு முயற்சி" எனும் தலைப்பில், புதுவை அருங்காட்சியகம் நிறுவனர் - காப்பாளர், திரு.அ.அறிவன் ( Puduvai Museum – National Heritage Trust) அவர்கள் தமிழுக்குத் தொண்டுகள் பல செய்த அறிஞர்கள் பற்றி எடுத்துரைத்ததோடு, அவர்களின் அரிய பெட்டகமான நூல்களினை ஆவணப்படுத்தி செந்தமிழ் தீஞ்சுவையை தெள்ளிதின் தமிழறிஞர்களின் படைப்புகளை பாதுகாத்து தமிழ் மொழியினை உலகம் முழுவதும் பரப்பும் உன்னதபணியினை மாணவர்களும் மனமுவந்து செயலாற்ற முன் வரவேண்டுமென சிறப்பாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வின் தொடர்ச்சியாக "தமிழ் அறிஞர்களின் தமிழ்த்தொண்டு" என்ற தலைப்பில் பதின் மூன்று தமிழ்த்துறை மாணவிகள் தங்கள் ஆய்வுத் தாள்களை வாசித்தளித்தனர். பேராசிரியப் பெருமக்களும் மாணவியக் கண்மணிகளும் தங்களுக்கான ஐயங்களை எழுப்பி கருத்துக்களையும் பெற்றுக் கொண்டனர். பன்னிரெண்டு பிற கல்லூரி பேராசிரியர்களும் தொன்னூறு மாணவிகளும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

இந்நிகழ்வின் இறுதியாக தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் திருமதி.R.முத்துக்கனி.,M.A.,M.Phil. அவர்கள் நன்றிநவில விழா நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவுற்றது.



தமிழ்த்துறைத்தலைவர் கையொப்பம்



முதல்வர் கையொப்பம்